بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஜுமுஆ பேருரை**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் - அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 26.12.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 26 Dec 2014 (Tamil)

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:-

அல்லாஹ்வின் அருளால் இன்று காதியானில் ஆண்டு மாநாடு ஆரம்பமாகியுள்ளது. இதே போன்று உலகில் வேறு சில நாடுகளிலும் இதே நாட்களிலும் ஆண்டு மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஒரு நேரத்தில் காதியானில் மட்டுமே ஆண்டு மாநாடுகள் நடைபெற்று வந்தது. பாட்டீஷனுக்குப் பிறகு பாகிஸ்தானிலும் ஆண்டு மாநாடு பெற ஆரம்பமானது. அஹ்மதிகள் அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களைப் பற்றி எடுத்துக் கூறுவதை அஹ்மதிய்யத்தின் எதிரிகளாலும், பாகிஸ்தான் அரசாங்கத்தாலும் தாங்கிக் கொள்ள இயலவில்லை. இதன் விளைவாக பாகிஸ்தானில் ஆண்டு மாநாடுகள் தடை செய்யப்பட்டது. மேலும் பாகிஸ்தானில் வசிக்கின்ற இலட்சக்கணக்கான அஹ்மதிய்யா ஜமாஅத்தினரை அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலின் புகழை எடுத்துக் கூறுவதிலிருந்தும் விலக்கி வைத்தார்கள். பாகிஸ்தானில் வசிக்கின்ற அஹ்மதிகளுக்கு ஜலஸா தொடர்பாக ஒவ்வொரு வருடமும் வரக்கூடிய டிசம்பர் மாதம் அவர்களிடம் ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாக வருகின்றது. அல்லாஹ் இவர்களுடைய இந்த அல்லாஹ்விடம் இவ்வாறு சென்றடைய வேண்டும். அதாவது அது அல்லாஹ்வுடைய அருளை ஈர்த்தவாறு ஒவ்வொரு எதிர்ப்பையும் ஒவ்வொரு கஷ்டத்தையும் தூக்கி எறிந்தவாறு செல்லட்டுமாக. மேலும் இன்று உலகிலுள்ள அஹ்மதிகள் எந்த அருளிலிருந்து பயனடைந்து கொண்டிருக்கின்றதோ அந்த அருளிலிருந்து பாகிஸ்தானிய அஹ்மதிகளும் பயனடைய வேண்டும். எதிரிகள் மாறாக, எந்தெந்த அரசாங்கங்கள் இருந்தனவோ அவைகள் எதிரிகளுடன் கைகோர்த்து பாகிஸ்தானிலுள்ள அஹ்மதிய்யா ஜமாஅத் மீது அடக்குமுறையை கையாண்டால் அஹ்மதிய்யத்தின் எதிர்ப்பை தடுத்து விடலாம் என்று கருதினார்கள். ஆனால் என்ன நடந்தது ? ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் துவக்கப்பட்ட இந்த ஆண்டு மாநாடு உலகளாவிய அளவை எட்டியுள்ளது. மேலும் அஹ்மதிகள் மட்டுமல்ல. மாறாக, உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்கள் மற்றும் மாற்று மதத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமின்றி, நல்லுள்ளம் கொண்ட முஸ்லிம்களும் கூட அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஆண்டு மாநாட்டை எப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியாக கூறுகின்றார்கள் என்றால் அது உலகத்திற்கு இஸ்லாத்தின் உண்மையான போதனையை எடுத்துக்கூறி இஸ்லாத்தின் உண்மையான அழகிய போதனைகள் மூலம் உலகை கவனமூட்டுகின்றது. இது இறைநியதியில் ஒன்றாகும். இது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இவ்வாறு தெளிவாக சொற்களில் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இந்த மாநாட்டை சாதாரண பௌதீக மாநாட்டைப் போன்று கருதாதீர்கள். இந்த மாநாடு இறை உதவி மற்றும் இஸ்லாத்தினுடைய பெயரை மேலோங்கச் செய்வதற்கான அடித்தளமாகும். அதாவது இந்த மாநாடுகளின் மூலமாக உலகில் இஸ்லாத்தினுடைய பெயர் மேலோங்கப்பட வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இந்த மாநாட்டிற்கு வருபவர்கள் எவற்றை கற்றுக் கொள்வார்கள் என்றால் அது அவர்களுடைய அறிவு

மற்றும் செயல் நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவையாக அமையும். பிறகு இந்த அறிவு மற்றும் செயல் நிமைகளில் மாற்றங்கள் உலகை இஸ்லாத்தின் அழகிய மற்றும் அதன் முழுமையான மற்றும் இதர மார்க்கங்களை விட மேலானது என்பதை நிரூபிக்கக் கூடியதாக இருக்கும். ஏனென்றால் மனித முயற்சிகள் மட்டுமல்ல. மாறாக, அல்லாஹ்வின் உதவி இதில் தென்படும். மேலும் அன்னார் கூறினார்கள்.

இந்த இயக்கத்தின் அடித்தளத்தை இறைவன் தன்னுடைய கரங்களால் வைத்துள்ளான். மேலும் இதற்காக அவன் சமுதாயங்களையும் ஆயத்தப்படுத்தியுள்ளான். அது மிக விரைவாக இதில் வந்து சேரும். இது அந்த ஆற்றல்மிக்க இறைவனின் பணியாகும். அதற்கு முன்னால் எதுவும் சாத்தியமற்றது கிடையாது. மிக விரைவில் அந்த நேரம் வரவிருக்கின்றது. மாறாக, அது அருகில் இருக்கின்றது. இந்த மார்க்கத்தில் நாத்திகத்தின் அடையாளமும் இருக்காது. நாத்திகத்தின் மாற்றங்களை விரும்பக் கூடியவர்களும் இருக்க மாட்டார்கள். அவர்களில் வீணான மற்றும் விளைவுகளை ஏற்படுத்தாத, குர்ஆனில் இல்லாத விஷயங்களை இணைக்கின்றவர்களும் இருக்க மாட்டார்கள். எந்த நடுநிலையான வழியை திருக்குர்ஆன் கொண்டு வந்ததோ, மேலும் எந்த வழியை பெருமானார் (ஸல்) அவர்கள் தம்முடைய சஹாபாக்களுக்கு கற்றுக் கொடுத்தார்களோ, மேலும் எந்த வழியை ஆரம்ப காலத்திலிருந்த உண்மையாளர்களும், உயிர் தியாகிகளும், நல்லவர்களும் பெற்று வந்தார்களோ அந்த வழியை இறைவன் இந்த நடுநிலை சமுதாயத்திற்கு இப்பூமியில் ஏற்படுத்துவான். இது நடந்தே தீரும். எவருடைய காது கேட்கக் கூடியதாக இருக்கின்றதோ அவர்கள் கேட்கட்டும். எவர்கள் மீது நேர்வழி திறக்கப்படுமோ அவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவார்கள். ஆக, நிச்சயமாக இந்த மாநாடு நம்மிடையே மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். ஏற்படுத்தவும் வேண்டும். உலகில் மாநாடுகள் நடைபெறுகின்றது. அதில் பல்வேறு சமுதாயங்கள் இணைந்துள்ளது. அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு உதவி செய்தான். அதாவது சமுதாயங்கள் ஆயத்தமாகி இதில் இணைந்து கொண்டிருக்கிறது. மாறாக, இந்த நேரத்தில் காதியானில் ஆண்டு மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் 31 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். ஆப்ரிக்கா, ஆசியா, அரப், அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, மேலும் தீபகற்பங்களில் வசிக்கக் கூடியவர்களிலிருந்தும் பிரதிநிதிகள் இருக்கின்றார்கள். ஆக, ஒரு நாட்டில் ஆண்டு மாநாடுகள் நடத்துவதை தடை செய்து விட்டு எதிரிகள் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தை நாங்கள் தடுத்து விட்டோம் என்று எண்ணுகின்றனர். எதிரி அறிவற்றவனாவான். காலத்தின் இமாம், முஹம்மதிய்ய மஸீஹ் நான் இந்த ஜமாஅத்தை நிறுவுகிறேன் என்று அறிவிப்பு செய்யவில்லை. மாறாக, கூறினார்கள். இந்த இயக்கத்தின் அடித்தளத்தை இறைவனே தன்னுடைய கரங்களால் வைத்துள்ளான். அஹ்மதிய்யத்தின் எதிரிகளுக்கு தைரியம் இருந்தால் அவர்கள் இறைவனோடு சண்டையிடுங்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள்! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லாஹ்வுடைய எப்படிப்பட்ட அன்பிற்குரியவர்கள் ஆவார்கள் என்றால் அன்னாரோடு இறைவனுடைய உதவி இருக்கின்றது. ஆக, எதிர்ப்பதற்கு முன்பாக அன்னாரின் இந்த அறிவிப்பை கவனமாக கேட்க வேண்டும்.

### என்னை விரும்பாதவர்களே என்னை எதிர்ப்பதில் நிதானமாக செயல்படுங்கள்

ஒரு அரசாங்கமென்ன ? உலகிலுள்ள அனைத்து அரசாங்கங்களும் ஒன்றினைந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தை அழிக்க விரும்பினாலும் ஒருபோதும் அழிக்க முடியாது என்பதை எதிரிகள் நினைவில் கொள்ள வேண்டும். இன்ஷா அல்லாஹ். ஏனென்றால், இந்த ஜமாஅத் தான் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட முழுமையான மற்றும் உண்மையான மார்க்கத்தின் உண்மையான போதனையை எல்லாவிதமான குளறுபடிகளிலிருந்தும் தூய்மையாக்கி நமது தலைவர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த அதே வடிவத்தில் நிலைநாட்டும் ஜமாஅத்தாகும். ஓரிடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) இவ்வாறு கூறினார்கள்.

நினைவில் கொள்ளுங்கள். என்னுடைய இயக்கம் என்னால் உருவாக்கப்பட்டதாக இருந்தால் அது அடையாளம் தெரியாமல் அழிந்திருக்கும். ஆனால் அது இறைவன் புறமிருந்து இருக்குமேயானால், நிச்சயமாக அது இறைவன் புறமிருந்து தோன்றியதேயாகும். முழு உலகமும் அதை எதிர்த்தாலும் அது வளரும்; மலரும். மேலும் வானவர்கள் அதை பாதுகாப்பார்கள். ஒருநபர் கூட என்னுடன் இல்லையென்றாலும், ஒருவர் கூட எனக்கு உதவி செய்யவில்லை என்றாலும் நிச்சயமாக இந்த இயக்கம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

எதிரிகள் முயற்சி செய்து இந்த இயக்கத்தை அழித்து விட முடியும் என்பது எவ்வாறு சாத்தியமாகும். ஆனால் நாமும் நினைவில் கொள்ள வேண்டும். நமக்கும் சில பொறுப்புகள் இருக்கின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் நிலைநாட்டப்பட்ட இந்த இயக்கம் சாதாரண ஒரு இயக்கம் அல்ல என்பதையும், மேலும் அன்னார் ஆரம்பித்த இந்த மாநாடுகளும் சாதாரண மாநாடுகள் அல்ல என்பதையும் நாமும் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு அஹ்மதி அஹ்மதி என்று கூறிக் கொள்வது சாதாரண விஷயமல்ல. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்.

பலவீனமான சிலர் சென்று விட்டாலும், முழு உலகமும் என்னை விட்டுவிட்டாலும் கூட இறைவன் என்னை விட மாட்டான். இது அவனுடைய வாக்குறுதியாகும். ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளதாக வாதம் செய்யக்கூடிய ஒவ்வொரு அஹ்மதியின் பொறுப்பு என்னவென்றால் அல்லாஹ்வின் உதவி மற்றும் ஒத்துழைப்பில் பங்குதாரர் ஆவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடம் காண விரும்பிய அந்த புரட்சியை தன்னுள் ஏற்படுத்த வேண்டும். ஆக, நாம் மாநாடுகளில் கலந்து கொள்வது மட்டும் போதுமானதல்ல. மாறாக, நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆவிற்கு வாரிசாக இருக்கின்றவர்களோடு ஒன்றிணைவது அவசியமாகும். மாநாடுகளில் கலந்த கொள்வது மட்டும் அன்னாருடைய துஆக்களுக்கு நம்மை வாரிசாக்கி விடுமா ? 3 அல்லது 4 மணி நேரம் மட்டும் மாநாட்டை கேட்டு விட்டோம். முழக்கமிட்டு விட்டோம். இது மட்டும் போதுமானதா ? இல்லை. இந்த துஆக்களுக்கு வாரிசாவதற்காக நாம் நம்மை ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும். அதாவது எதை நாம் கேட்டோமோ அல்லது எந்த சுற்றுச் சூழலில் நாம் எத்தகைய உணர்வை ஏற்படுத்தினோமோ அது தற்காலிகமானதா ? அல்லது நிரந்தரமாக நம்முடைய பொறுப்புகளுக்கு நம்மை பங்குதாரராக ஆக்கக் கூடியதாக இருக்கின்றதா ? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அல்லாஹ்வும் அவனது ரஸூலும் நம்மிடம் எதிர்பார்க்கின்ற அந்த தாக்கம் மேலும் மாநாடு சமயங்களில் ஏற்பட்ட தாக்கத்தை நாம் நம்மால் இயன்ற அளவிற்கு பெற முயற்சி செய்ய வேண்டும் என்ற உடன்படிக்கையோடு இந்த மஜ்லிஸிலிருந்து எழுப்பக்கூடியதாக இருக்க வேண்டும். இவ்வாறு செய்தால் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்த துஆக்களுக்கு வாரிசாகிக் கொண்டே செல்பவர்களாக இருப்போம். ஆக, முயற்சி மற்றும் துஆ ஆகிய இரண்டும் மிக அவசியமாகும். இதன் மூலமாக நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்களுக்கு வாரிசாகக் கூடியவர்களாக வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மாநாடு தொடர்பாக எங்கு நமக்கு அல்லாஹ்வின் உரிமையை நிலைநாட்டுவதன் பக்கம் கவனமூட்டினார்களோ அங்கு அடியார்களின் உரிமையின் பக்கமும் கவனம் செலுத்துமாறு அதிகமாக கவனமூட்டியுள்ளார்கள். அன்னார் மாநாட்டில் கலந்து கொண்டவர்களிடம் நேர்மை, இறையச்சம் மற்றும் வீணானவற்றிலிருந்து விலகி இருப்பது ஆகியவற்றின் பக்கம் கவனமூட்டிய பிறகு உள்ளத்து வேதனையுடன் தன்னை ஏற்றுக் கொண்டவர்களிடம் இந்த எதிர்பார்ப்பை வைத்திருந்தார்கள். அதாவது மென்மையான உள்ளம், பரஸ்பர அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றில் ஒருவர் மற்றொருவருக்கு முன்னுதாரனமாக திகழ வேண்டும். பனிவை மேற்கொள்பவராக இருக்க வேண்டும். ஒருவர் மற்றவருக்காக தியாகம் செய்யக்கூடிய உணர்வை கொண்டவர்களாகவும், உண்மை மற்றும் நேர்மையின் உயர் தரத்தை

நிலைநாட்டுபவராகவும் இருக்க வேண்டும். புறம் பேசுவது, தீய ஒழுக்கத்தை வெளிப்படுத்துவதிலிருந்தும் அவர் விலகி இருக்க வேண்டும். ஆக, இது தொடர்பாக ஒவ்வொருவரும் தம்மைத் தாமே ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும். அதாவது இந்த உயர்தரமான நல்லொழுக்கத்தில் நாம் முன்மாதிரியாக இருக்கின்றோமா ? நாம் மற்றவர்களுக்காக தியாகம் செய்வதில் ஒரு முன்மாதிரியாக ஆவதற்கு முயற்சி செய்கின்றோமா ? திருக்குர்ஆனிலும் அல்லாஹ் கூறிய மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்த்த அந்த பணிவு மற்றும் எளிமையின் உயர் தரத்தை நாம் அடைந்து விட்டோமா ? அதனுடைய முன்மாதிரியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் நம்முன் வைத்தார்கள். அவ்வாறில்லை என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் துஆக்களில் பங்குதாரராக ஆவதற்கும் அல்லாஹ்வின் அருளை ஈர்ப்பதற்கும் நாம் செய்கின்ற முயற்சிகள் ஒன்றுமற்றதாகும். நாம் உண்மையிலேயே அன்னாருடைய துஆக்களுக்கு வாரிசாக வேண்டுமென்றால் உலகத்தில் மாநாடுகளில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் குறிப்பாக காதியான் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடியவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த வேதனையை குறிப்பாக உணருங்கள். அந்த வேதனையை அன்னார் மாநாட்டில் கலந்து கொள்பவர்களிடம் வெளிப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதை விரும்புகின்றார்கள் என்பதை அன்னார் பலமுறை நம்மிடம் கூறியுள்ளார்கள். உலக தொடர்பிலும் நாம் பார்க்கின்றோம். தாய், தந்தைக்கு மிக நெருக்கமான குழந்தை யாரென்றால், அவர்களுடைய பேச்சை கேட்கக்கூடிய, அவர்களுக்கு பனிவிடை செய்யக்கூடிய, அவர்களுக்கு கட்டுப்படுவதில் முன்னேறி இருக்கின்ற குழந்தைகள் தான் பெற்றோர்களின் துஆக்களுக்கு வாரிசாகக் கூடியதாக இருக்கின்றது. எப்போது நாம் அன்னாருடன் உள்ள தொடர்பை அதிகரிப்போமோ அப்போது தான் அதன் கனியையும் நாம் உண்போம். மாநாடுகளில் கலந்து கொள்பவர்களுக்காக செய்யப்பட்ட துஆக்கள் எப்படிப்பட்ட கருவூலம் என்றால் அது கியாமத் வரை சென்று கொண்டே இருக்கும்.

இதிலிருந்து பலன் பெறுபவர்கள் நிச்சயமாக நற்பாக்கியம் பெற்றவர்களாவர். அன்னாருடைய சில கூற்றுக்களை எடுத்து வைப்பேன். அதிலிருந்து அன்னார் ஜமாஅத் மக்களோடு வைத்திருந்த எதிர்பார்ப்பு தெரிய வருகின்றது. அன்னார் ஓரிடத்தில் கூறினார்கள்.

நம்முடைய ஜமாஅத் ஜமாஅத்தாக ஆக விரும்பினால் அது மரணத்தை மேற்கொள்ள வேண்டும். உலக ஆசைகளிலிருந்தும் தப்பிக்க வேண்டும். அல்லாஹ்விற்கு எல்லாவற்றையும் விட முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வெளிப்படுத்திக் காட்டுதல் மற்றும் தேவையில்லாத விஷயங்களினால் மனிதன் அழிந்து விடுகின்றான்.

மேலும் அன்னார் கூறினார்கள். நீங்கள் உணர்ச்சிவசப் படுவதிலிருந்தும் விலகி இருங்கள். அன்னியர்கள் உங்களை சந்திக்கும் போது உங்கள் முகத்தை பார்க்கின்றார். உங்களுடைய நல்லொழுக்கம், குணம், உறுதிப்பாடு, இறைக் கட்டளைக்கு கட்டுப்படுதல் ஆகியவை எவ்வாறு இருக்கின்றது என்று பார்க்கின்றார். அது சரியாக இல்லை என்றால் அவர் உங்கள் மூலமாக தடுமாறி விடுகின்றார். ஆக, இந்த விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள்.

மேலும் அன்னார் கூறினார்கள். திருக்குர்ஆன் கூறுகிறது. *மன் கதல நஃப்ஸன் பி கைரி நஃப்ஸின் அவ் ஃபிஸாத்* அதாவது எவர் ஒருவர் எந்த உயிரையும் அநியாயமாக கொலை செய்வாரோ அவர் முழு உலகையும் கொலை செய்தவராவார். கூறினார்கள். அவ்வாறே நான் கூறுகின்றேன். எவர் ஒருவர் தன்னுடைய சகோதரனுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லையோ அவர் முழு உலகத்துடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லை. கூறினார்கள். ஈமான் உங்களை விட்டும் சென்று விடும் அளவிற்கு உலகத்தை நேசிக்காதீர்கள். மேலும் கூறினார்கள். இந்த ஜமாஅத்தை அல்லாஹ் முன்மாதிரியாக ஆக்க விரும்புகின்றான். இதிலும் சகோதரத்துமும், அனுதாபமும் இல்லையென்றால் பல தீமைகள் ஏற்படும். மேலும் அன்னார்

கூறினார்கள். நான் உண்மையாகவே கூறுகின்றேன். அதாவது மார்க்கத்தோடு உலகம் ஒன்றாகி விட முடியாது. தொண்டு செய்பவர்களோடு வேண்டுமானால் ஒன்றிடலாம். ஆனால் அதோடு ஒன்றிவிட முடியாது. எவருக்கு இறைவனுடைய தொடர்பு இருந்து அவர் பிச்சை கேட்கக் கூடியவராக இருந்தார் என்று நாம் எங்கும் கேட்டதில்லை. அல்லாஹ் அவர்களது குழந்தைகளின் மீது கருணை காட்டுகின்றான். (ஹுஸூர் கூறினார்கள். இது செவிமடுக்க வேண்டிய விஷயமாகும்.) உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவரையே நம்முடைய ஜமாஅத்தில் இணைந்தவராக கருத வேண்டும். எவர் இந்த உடன்படிக்கையை கருத்தில் கொண்டு அல்லாஹ்வின் வழியில் செயல்படுகின்றாரோ அவருக்கு அல்லாஹ் ஆற்றலை வழங்குகின்றான். மேலும் அன்னார் வேதனையுடன் கூறினார்கள். நம்முடைய ஜமாஅத் மக்கள் வெறும் நாவளவில் பேசக் கூடியவராக மட்டுமல்லாமல் பைஅத் உறுதிமொழிக்கேற்ப முழுமையாக செயல்படக் கூடியவராக விளங்க வேண்டும். உள்ளத்தில் மாறுதல்களை ஏற்படுத்த வேண்டும். பிரச்சனைகளின் மூலமாக நீங்கள் இறைவனை சந்தோஷப்படுத்திவிட இயலாது. உங்களிடம் மாற்றம் ஏற்படவில்லை என்றால் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் எவ்வித வேறுபாடும் கிடையாது. கூறினார்கள். தன்னுடைய ஆன்மாவின் மாற்றத்திற்காக முயற்சி செய்யுங்கள். துஆ கேளுங்கள். சதகா கொடுங்கள். மற்ற எல்லாவிதமான தடைகளிலிருந்தும் என்னை அடைவதற்கு முயற்சி செய்கின்ற மக்களோடு இணைந்து விடுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்தின் ஆன்மீக மற்றும் நல்லொழுக்க நிலைமைகளை உயர்த்த பல்வேறு வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்கள். நாம் அதை நம்முன் வைத்துவாறு நமக்கும் மற்றவர்களுக்கும் இடையில் ஒரு வெளிப்படையான மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இதுவன்றி நாம் பைஅத்தின் நோக்கத்தை நிறைவேற்ற இயலாது. அன்னார் மிக வெளிப்படையாக கூறினார்கள். எவ்வித சந்தேகமுமின்றி அறிவில் முன்னேற்றம் மக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. ஆனால் இறைவனை சந்தோஷப்படுத்த, அவனுடைய அன்பை பெறுவதற்காக செயலில் முன்னேற்றம் மற்றும் தன்னுடைய நிலைமைகளை மாற்றுவதற்கும், மேலும் இறைவனுடைய கட்டளைகளை நாம் செயல்படுத்தி அந்த மக்களுடன் நாம் இணைவது அவசியமாகும். அந்த மக்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான். வல்லதீன ஜாஹது ஃபீனா அதாவது எந்த மக்கள் நம்மை சந்திப்பதற்கு முயற்சி செய்கின்றனரோ, அந்த முயற்சி தன்னுடைய ஆன்மாவை தியாகம் செய்வதன் மூலமாகவும், துஆ மற்றும் தொழுகையின் மூலமாகவும் அல்லாஹ்விடம் உதவி கேட்டவாறும் சதகா கொடுத்தும், எல்லாவிதமான வழிமுறைகளையும் அவர்கள் மேற்கொள்கின்றனர். இதன் மூலமாக இறைவன் திருப்தி அடைந்து விட வேண்டும் என்பதே அவர்களுடைய முயற்சியாக இருக்கின்றது. அல்லாஹ் இப்படிப்பட்ட மக்களின் துடிப்பை கண்டு இவ்வாறு கூறுகின்றான். லனஹ்தியன்னஹும் ஸுபுலனா அதாவது நாம் நிச்சயமாக அவர்களுக்கு எம்முடைய வழியை அடையும் நல்வாய்ப்பினை வழங்குவோம். ஆக, அல்லாஹ்வின் அருளை பெறுவதற்கு நாம் முதலில் முயற்சி செய்ய வேண்டியது அவசியமாகும். அப்போது தான் அல்லாஹ்வின் அருகாமையைப் பெற முடியும். இதே போன்று அல்லாஹ்வின் அன்பிற்குரியவர்களின் துஆக்களுக்கு வாரிசாவதற்கும் தம்மைத் தாமே அந்த துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தகுதி உடையவர்களாக ஆக்குவதற்கு முயற்சி செய்வது அவசியமாகும். ஆக, இந்த மாநாடுகள் நமக்கு இந்த துஆக்களிலிருந்து பங்குதாரராக ஆக்குவதற்கான சுற்றுச் சூழலை ஏற்படுத்தி தருகின்றது. இதில் நாம் நம்மை நாமே ஆராய்ந்தவாறு அல்லாஹ்வின் உரிமை மற்றும் அடியார்களின் உரிமை ஆகியவற்றை உயர்த்துவற்கு முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலமாக அல்லாஹ்வை அடைவதற்கான வழியை நாம் விரைவில் பெற வேண்டும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக.

இரண்டாவது விஷயம் காதியான் ஆண்டு மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்குரியதாகும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடியவர்களை தன்னுடன் காலநிலைக்கு ஏற்ப படுக்கைக்கான ஏற்பாட்டையும் செய்து வருமாறு கூறினார்கள். இதனால் குறிப்பாக

இந்தியாவில் வசிக்கக் கூடியவர்கள் மாறாக, பாகிஸ்தான் மக்களும், வெளியில் இருந்து வருபவர்களும் குளிரில் அணிவதற்கான ஆடைகளை தம்மால் இயன்ற அளவிற்கு கொண்டு வர வேண்டும். உண்மையான நோக்கம் ஆன்மீக சுற்றுச் சூழலிலிருந்து பயன் பெறுவது தான். மாநாட்டிற்கு வருவதும், இந்த சுற்றுச் சூழலிலிருந்து பயன் பெறுவதும் எவ்வாறிருப்பினும் சில கஷ்டத்தை கடந்து செல்வதால் தான் கிடைக்கின்றது. தியாகங்கள் செய்ய வேண்டி வருகின்றது. சொகுசான வாழ்வை எதிர்பார்ப்பதற்கு பதிலாக இந்த விஷயத்தை நினைவில் கொள்ளுங்கள். மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்த்தவற்றை அடைவதற்கு முயற்சி செய்யுங்கள். இவர்களில் சில பழைய அஹ்மதிகளைத் தான் முதலில் கூறுகின்றேன். எவர்கள் உலகத்திற்கு முக்கியத்துவம் கொடக்கின்றார்களோ அவர்களிடம் நான் கூறுவது என்னவென்றால், இந்த புதிய அஹ்மதிகளின் நல்லொழுக்கங்கள் மற்றும் விசுவாசத்தை பாருங்கள். துஆக்களில் நேரத்தை செலவிடுங்கள். இந்த நாட்களில் குறிப்பாக உங்களுடைய ஈமானிற்காக துஆ செய்வதுடன் ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் கிலாஃபத்துடனான தொடர்பில் முன்னேறுவதற்காகவும் துஆ செய்யுங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஜமாஅத் மக்களிடம் வைத்திருந்த எதிர்பார்ப்பினை அடைவதற்காகவும் துஆ செய்யுங்கள். நம்பிக்கையாளரின் துஆக்கள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கு உதவக் கூடியதாக இருக்கும். ஜமாஅத்திற்காகவும், கலீஃபாவிற்காகவும், ஒருவர் மற்றவருக்காகவும் துஆ செய்யக் கூடியவர்களையும் அல்லாஹ் தனது அருள்களுக்கு வாரிசாக்குகின்றான். இன்ஷா அல்லாஹ். உங்களுடைய துஆக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய ஜமாஅத்திற்காக செய்த துஆக்களோடு ஒன்றிணையும். மாநாடு நல்ல முறையில் நிறைவடைவதற்கும், எதிரிகளின் ஒவ்வொரு தீமைகளையும் அவர்கள் பக்கமே திரும்புவதற்கும் துஆ செய்யுங்கள். ஏனென்றால் எதிரிகள் எங்கிருந்தும, எதையும் செய்யலாம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மிஷன் மற்றும் நோக்கத்தை விரைவாக முழுமையடைந்தவாறு பார்ப்பதற்கு துஆ செய்யுங்கள். உங்களுடைய பகல், மாலை, இரவு ஆகியவற்றை இறை தியானத்தில் செலவிடுங்கள். அப்போது தான் மாநாட்டில் கலந்து கொண்டதற்கான நோக்கத்தை பெற முடியும். அல்லாஹ் இவர்கள் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. நாம் உலகத்தை முஹம்மதிய்ய மஸீஹோடு ஒன்றிணைத்தவாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் உலகத்தை கொண்டு வந்தவாறு பார்ப்பதற்கான அந்த காட்சியை அல்லாஹ் கூடிய விரைவில் நமக்கு காட்டுவானாக.

தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் மதிப்பிற்குரிய அஹ்மது ஷம்ஷீர் சோகிய சாஹிப் முபல்லிக் அவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். அவர்கள் 24 டிசம்பர் 2014 அன்று மார்ஸியஸில் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். சுய நலமற்றவரும், பகட்டுத் தன்மையிலிருந்தும் தூய்மையானவராவார். ஹுஸூர் கூறினார்கள். எனக்கு நினைவில் இருக்கின்றது. ரப்வாவில் நாங்கள் படித்துக் கொண்டிருக்கும் போது ஆண்டு மாநாட்டில் நாங்கள் ஒன்றாகவே தொண்டு செய்து வந்தோம். மிகவும் பணிவை மேற்கொள்பவராக விளங்கினார். எல்லோருடனும் புன்னகையுடன் மற்றும் நல்லொழுக்கத்துடனும் நடந்து கொள்பவராவார். எப்போதும் கலகலப்பாக இருக்கக் கூடியவராவார். மார்க்க ஞானம் கொண்டவராவார். அல்லாஹ் அவர்களுடைய தகுதியை உயர்த்துவானாக. அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வானாக. ஆமீன்.

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 26.12.14
Summarized by Nazarath Nashr-O-Isha'ath
Tamil Translation : Muallim. A. Khaleel Ahmad
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516